எனது இல : NP/05/01/EB.SFA/01
நிதி திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு மாகாணம்.
யாழ்ப்பாணம்.
2020.07.15

ஆணையாளர்,மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் காணி ஆணையாளர் திணைக்களத்தின் நில அளவை உதவியாளர் சேவையின் தரம் III, II மற்றும் தரம் I இல் உள்ள அலுவலகர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2020**

வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 09.01.2020 இல் அனுமதிக்கப்பட்டதும் 01.01.2013ம் திகதியிலிருந்து செயல்வலுவில் உள்ளதுமான வடக்கு மாகாண பொதுச்சேவையின் காணி ஆணையாளர் திணைக்களத்தின் நில அளவை உதவியாளர் சேவையின் பதவிக்கான சேவைப்பிரமாணக் குறிப்பின் பந்தி 12இனது ஏற்பாடுகள், மற்றும் இணைப்பு II, இணைப்பு III இணைப்பு IV இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக நில அளவை உதவியாளர் சேவையின் தரம் III, II மற்றும் தரம் I ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையானது செயலாளர், நிதி திட்டமிடல் உள்ளூராட்சி அமைச்சு அவர்களால் 2020ம் ஆண்டு **புரட்டாதி மாதம்** யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**2.0 தகைமைகள்:**
குறித்த பதவியில் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அச் சேவையில் குறித்த தரமொன்றில் நியமனமமொன்றை/ பதவியுயர்வினை பெற்றுள்ள அலுவலர்கள் கீழ்வரும் அடிப்படையில் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி அன்று விண்ணப்பதாரிகள்

- தரம் III இல் கடமையாற்றும் அலுவலர்கள் 1வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கும்
- தரம் II இல் கடமையாற்றும் அலுவலர்கள் 2வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கும்
- தரம் I இல் கடமையாற்றும் அலுவலர்கள் 3வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கும், தோற்றுவதற்கு தகைமை பெறுவர்

❖ இதுவரை இப்பரீட்சையினை சித்தியெய்திராத அலுவலர்களும் இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமையுடையவர்களாவர்.
❖ ஓர் அலுவலர் பதவி வகிக்கும் தரத்திற்குரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

**3.0 விண்ணப்பப் படிவம்**

❖ விண்ணப்படிவங்கள் அனுப்பி வைக்க வேண்டிய இறுதித்திகதி 2020.08.15 ஆகும்
❖ விண்ணப்பமானது இச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம்மாதிரி விண்ணப்பபடிவத்திற்கு அமைவாக தமது விண்ணப்பங்களை தயாரித்துக்கொள்ளல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர் ஊடாக **"செயலாளர் நிதித் திட்டமிடல் உள்ளூராட்சி அமைச்சு , வடக்கு மாகாணம், A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.
❖ விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வடக்கு மாகாணப் பொதுச் சேவையின் காணி ஆணையாளர் திணைக்களத்தின் நில அளவை உதவியாளர் சேவையின் தரம் III, II மற்றும் I இல் உள்ள அலுவலர்கான வினைத்திறமைகாண தடைப்பரீட்சை – 2020"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், உரிய தகவல்களை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் அறிவிப்பு ஏதும் இன்றி நிராகரிக்கப்படும்.

**6. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பரீட்சைக்கும் பரீட்சகர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்குப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

(ii) செல்லுபடியாகும் இலங்கைக் கடவுச்சீட்டு (Passport)

(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் (Driving License)

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஏதாவதொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்யும் அதிகாரம் பரீட்சகருக்கு உண்டு.

**5.0 விண்ணப்பங்கள்:-**

விண்ணப்பத்தின் இல 1 முதல் 6 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனைய பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் A4 அளவினதான தாளில் விண்ணப்பமானது கணினியில் தயார் செய்யப்பட்டு பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்து மூலம் சரியாகவும், தெளிவாகவும் பூரணப்படுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பப்படிவமானது இத்துடன் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைவாக தயார் செய்து விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி மற்றும் முன்னோட்டப் பிரதி என்பன அனுப்பிவைத்தலாகாது என அறிவுறுத்தப்படுகிறது.

மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும்.

தரப்பட்டுள்ள பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கூடிய கவனம் எடுத்தல் வேண்டும் என்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

**06. பரீட்சைக் கட்டணம் :-**

**6.1.** முதன் முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக்கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

**6.2.** ஏனைய அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 250ஐ வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகமொன்றிலும் செலுத்தி, காசுக்கட்டளையினை “செயலாளர், நிதி திட்டமிடல் உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு மாகாணம்” என்ற பெயருக்கு யாழ்ப்பாணத் தபால் அலுவலகத்தில் மாற்றக்கூடியவாறு பெற்றுக்கொண்டு விண்ணப்பத்துடன் கழராதவாறு இணைத்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி காசுக்கட்டளையின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

**6.3.** இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் முடியாது

**7.0 பரீட்சைக்கான அனுமதி :-**

விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு, வடக்கு மாகாண நிதி, திட்டமிடல், உள்ளூராட்சி அமைச்சு செயலாளரினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளார் என்பதற்கான சான்று அல்ல என்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தங்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் பின்வரும் விபரங்களுடன் வடமாகாண நிதி திட்டமிடல் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

- கோரிக்கைக் கடிதம்,
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி,பணம் செலுத்திய பற்றுச்சீட்டின்உறுதிப்படுத்திய பிரதி,
- விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், திகதி.
- அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய பெக்ஸ் இலக்கம் (Fax No).

8.0 இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர்களுக்கு, பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்களால் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XIIன் பிரிவு 19ற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

9.0 உத்தியோத்தர்கள் பரீட்சையில் சித்தியெய்துவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

10.0 பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சாத்திகளுக்குரிய பெறுபேறுகளும் வடக்கு மாகாண நிதி, திட்டமிடல், உள்ளூராட்சி அமைச்சு செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும்.

**11.0 பாடத்திட்டம் :-**

11.1 நில அளவை உதவியாளர் தரம் III இல் உள்ளவர்களுக்கான 1 வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் போது நில அளவை உதவியாளர் தொடர்பில் பின்வரும் விடயங்கள் செயன்முறைப் பரீட்சை (Practical Test) மூலம் பரீட்சிக்கப்படும். இச் செயன்முறைப் பரீட்சையானது பின்வரும் விடயங்களில் உள்ள அறிவையும் வேலை செய்யும் ஆற்றலையும் பரீட்சிப்பதாய் அமையும்.

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| செயல்முறைப்பரீட்சை | கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றிய அறிவு மற்றும் செயலாற்றல் தொடர்பாகப் பரீட்சிக்கப்படும்.<br>I. அதிகளவில் அளவைக்காகப் பயன்படுத்தப்படும் நில அளவை உபகரணங்களது பெயர்களுடன் அவற்றைச் சரிவரப் பாவிக்கும் முறைகளும், பராமரிப்பு,<br>II. நேர்கோடுகள் மற்றும் 90 கோண ஒழுங்குகள்<br>III. அளவை உபகரணங்கள் - தியோடலைற்று மற்றும் மட்டமாக்கிகளைக் குறித்த புள்ளியில் சீராக்குதல், உபகரணங்கள், பொருத்தப்படுகையில் முக்காலியைக் கையாளும் சரியான முறை<br>IV. சங்கிலியளவை<br>a) அ. சங்கிலியை நீட்டுதல், சுத்தம் செய்தல் மற்றும் இழுத்துக்கொண்டு போகும் சரியான முறை<br>b) ஆ. சமப்படுத்தும் கருவியைப் பயன்படுத்தலும், ஆதாரம் கொடுக்கப்பட்டுள்ள சங்கிலிகளைக் கண்மட்டத்தில் சீராக்குதலும்,<br>c) இ. முன் சங்கிலி, பின் சங்கிலி தொடர்பான வேலை<br>d) சங்கிலிகள் மற்றும் நடாக்களை வாசித்தல்<br>V. அளவிட பருவரையை வாசித்தல்<br>VI. பொதுவான அலுவலக நடைமுறைகள் மற்றும் நிறுவன நிர்வாக செயன்முறைகள் குறித்து இச்சேவைக்கு ஏற்புடையதான அறிவு. |

11.2 நில அளவை உதவியாளர் தரம் II இல் உள்ளவர்களுக்கான 2 வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் போது நில அளவை உதவியாளர் தொடர்பில் பின்வரும் விடயங்கள் வாய்மொழிப் பரீட்சையின் போது பரீட்சிக்கப்படும். இச் செயன்முறைப் பரீட்சையானது பின்வரும் விடயங்களில் உள்ள அறிவையும் வேலை செய்யும் ஆற்றலையும் பரீட்சிப்பதாய் அமையும்.

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| வாய்மொழிப்பரீட்சை | கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றிய அறிவு இப்பரீட்சையில் செய்யப்படவேண்டிய வேலை அளவு, நிலக் குறிகள் தொடர்பான விடயங்கள், லீவு உரிமைகள், பண உறுதிச் சீட்டுக்கள் தயாரித்தல், பிரயாணச் செலவுகள் தொடர்பான விதிமுறைகளை அறிந்திருத்தல், உத்தியோக பூர்வக் கடிதங்களை எழுதுதல், களப்புத்தகத்தில் பதிவிடுதல் மற்றும் வாசித்தல் தொடர்பான அறிவு, வரிப்படம் வாயிலாகக் கள இடங்களைக் கண்டறிதல், ஒரு வரிப்பட அளவிடையைக் கொண்டு தூரத்தை அறிந்து கொள்ளல் நானாவித அளவைகள் பற்றிய அறிவு, திணைக்களத்தின் கருவிகளினதும் அளவை உபகரணங்களினதும் பாதுகாப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பான அறிவும், விளங்கிக்கொள்ளுதலும் பரீட்சிக்கப்படும். |

11.3 நில அளவை உதவியாளர் தரம் I இல் உள்ளவர்களுக்கான 3 வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் போது நில அளவை உதவியாளர் தொடர்பில் பின்வரும் விடயங்கள் வாய்மொழிப் பரீட்சையின் போது பரீட்சிக்கப்படும். அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த குழுவினால் இவ் வாய்மொழிப்பரீட்சை நடாத்தப்படும்.

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| வாய்மொழிப்பரீட்சை | தாபன விதிக்கோவையின் விதிமுறைகள், நிதி ஒழுங்கு விதிக்கோவையின் விதிமுறைகள், களஞ்சியப்படுத்தல் தொடர்பான அறிவு, ஆளணி முகாமை குறித்த அறிவு, களக்கடமைகள் பற்றிய அறிவு போன்றவற்றை பரீட்சிக்கும் பரீட்சையாகும். |

12.0 இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினைத் தங்கள் அமைச்சின்/திணைக்களங்களின்/ அலுவலகத்தின் கீழ்க் கடமையாற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்குத் தெரியப்படுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் இத்தகவல்களை வடமாகாண இணைத்தளமான www.np.gov.lk எனும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

கவனிக்கவும் :- இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் நிதி, திட்டமிடல், உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும்.

ச.மோகநாதன்
செயலாளர்,
நிதி, திட்டமிடல் உள்ளூராட்சி அமைச்சு,
வடக்கு மாகாணம்.